திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, ஒவ்வொரு ஆண்டும் 'இதற்கு முன் இருந்ததைவிட அதிகமாகக் கொள்முதல் செய்கிறோம்; அதிகமாக உணவு வினியோகம் செய்கிறோம்' என்று பேசியும், பத்திரிகையிலும் எழுதி வருகிறார்கள். ஆனால் அதற்கு மாருக இப்போது கொள்முதலில் குறைந்து போனதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மூல பதிலிலேயே அடங்கியிருக்கிறது. சீர் கேடான பருவ நிலையே காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Taladi Crops

* 98 Q.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the statement made by the mirasdars of Nagapattinam area of Thanjavur district that 500 acres of Taladi Crops withered away as a result of the non-supply of water and the non-supply of oil-engines by the Agriculture Department is true?

தாளடிப் பயிர்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தஞ்சை மாவட்ட நாகபபட்டினம் பகுதி மிராசுதார்கள் தங்களுக்கு தண்ணீர் விடாததாலும், விவசாய இலாகா எண்ணெய்ப் பொறிகள் வழங்காததாலும் 500 ஏக்கர் தாளடிப் பயிர் காய்ந்துவிட்டது எனக் கூறுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வட கிழக்குப் பருவ மழை தவறிவிட்டதாலும், மேட்டூரில் நீர்மட்டம் மிகவும் குறைந்துவிட்டதாலும் (நாகப்பட்டினம் வட்டம் உட்பட), தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரும்பாலும் காலம் கடந்து விதைத்த தாளடிப் பயிர் நீரின்மையால் பாதிக்கப்பட்டது. காலம் கடந்து விதைக்கப்பட்ட தாளடிப் பயிரைக் காக்க, பாசன வடிகால் வாயில்களிலிருந்து நீரை இறைப்பதற்கு வேளாண்மைத் துறையிடம் உள்ள எண்ணெய் இயந்திர விசையேற்றங்கள் அனைத்தையும் பயன்படுத்த எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டன. நாகப்பட்டினம் கோட்டத்தைப் பொறுத்தவரையில் இது காரியத்திற்கு 29 எண்ணெய் இயந்திரங்கள் வாடகைக்குக் கொடுக்கப்பட்டன; இதனால் 1,170 ஏக்கர் நிலம் பயனடைந்தது.

Fertiliser Mixtures

* 99 Q.—Thiru N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) the firms which were granted permission to produce fertiliser mixtures in Tamil Nadu;

(b) the quota of chemical fertilisers allotted by the Government to these firms during 1967-68; and

(c) whether the fertiliser mixtures produced by these firms are tested?

கலப்பு உரம்

திரு. என் ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் கலப்பு உரம் தயாரிக்க தமிழக அரசு அனுமதி பெற்ற நிறுவனங்கள் யாவை?

(இ) இந்த நிறுவனங்களுக்கு 1967-68-ல் அரசு வழங்கிய ரசாயன உர அளவு எவ்வளவு?

(உ) இந்த நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் கலப்பு உரம் பரிசோதனை செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ), (இ) & (உ) விவர அறிக்கை ஒன்று மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த ரசாயன உரம் உபரியாக இருக்கும்போது யாருக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பதைப் பற்றி அட்டவணையில்லை. நமக்கே பற்றாக் குறையாக இருக்கும்போதுகூட, இந்தக் கம்பெனிக் காரர்கள் பெற்று வருகிறார்கள். சட்ட மன்றத்திலும் இதுபற்றி கூறினேன். பற்றாக்குறை காலத்திலாவது கலப்பு உரம் வர்த்தகம் செய்கிறவர்களுக்குக் கொடுப்பதை அரசு நிறுத்தி வைக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் கூறும் குற்றச்சாட்டு சரியல்ல. இப்போது 21 கோடி ரூபாய்க்கான உரம் தேங்கிக் கிடக்கிறது.

Aduar Cancer Institute

*100 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) the nature of assistance afforded by the Government to the Cancer Institute at Advar; and

(b) the number of patients who can be accommodated in that Institute?

அடையாறு புற்றுநோய் மருத்துவமனை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு தமிழக அரசு செய்து வரும் உதவிகள் யாவை?

Printed as Appendix I on pages 195–200